R 5227 (page 127)

# ஆவலை எழுப்பும் ஒரு கேள்வி

## AN INTERESTING QUESTION

கேள்வி : தேவனுக்கு முன்பாக நமது நிற்குதலை கண்டுபிடிக்க ஏதாவது வழி இருக்கிறதா?

பதில் : அப்போஸ்தலர் யோவான் கூறுகிறதாவது: நம்முடைய இருதயம் நம்மை குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியம் கொண்டிருப்போம். ( 1 யோவான் 3 : 21) அதற்கு நம்மையும் நமது முன்னேற்றத்தையும் நாமே அளவீடு செய்ய ஆரம்பிக்க வேண்டும். நமது வாழ்க்கையின் காரியங்களில் நாம் தேவனை சந்தோஷப்படுத்துகிறோமா இல்லையா என்பதை அறிய, தேவனுடைய குடும்பத்திற்குள் வர தேவையானவைகளை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோமா என்பதை முதலில் நாம் அறிய வேண்டும். நாம் தேவனுடைய சித்தத்தை செய்ய நாம் நம்மை முழு அர்ப்பணம் செய்திருக்கிறோமா? நாம் நம்மை முழு அர்ப்பணம் செய்திருக்கிறோம் என்பதை அறிந்தால்,அடுத்து வரவேண்டிய கேள்வி, தேவனுடைய சித்தத்தை எந்த அளவுக்கு அறிந்திருக்கிறேன்? அதை எந்த அளவுக்கு செய்ய நாடுகிறேன்? என்பதாகும். நமது வாழ்க்கைக்குரியதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல், நமது நேரம், பலம் மற்றும் நாம் பெற்றிருக்கிற அனைத்தையும் தியாக மனதுடன் நம்மால் முடிந்தவரை பயன்படுத்துகிறோமா? பொதுவான முறையில் இதுதான் நாம் பின்பற்றுகிற மார்க்கமாக இருந்தால், பிறகு நாம் மிகவும் திருப்தியடைவதற்கு இதுவே போதுமானதாக இருக்கிறது.

பிறகு நாம் எதிர்பார்க்க வேண்டிய காரியம் என்னவென்றால், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். (2 தீமோத்தேயு 3 : 12 ) இந்த சாட்சி கொடுக்கிற ஆவி நம்மிடம் இல்லையென்றால் நாம் எந்த துன்பத்தையும் அடையவில்லை என்றால், நாம் நமது வெளிச்சத்தை பிரகாசிக்க பண்ணவில்லை. இது நம்மை அறிவீனமான காரியத்துக்கு வழி நடத்துக் கூடாது. ஆனால் நமது ஜீவனை அவருடைய ஊழியத்திற்கு கொடுக்கிறேனா என்பதை நம்மை நாமே சோதிக்க வேண்டும். தற்காலத்தில் பாடுகள் எதையும் நாம் காணவில்லை என்றால் அது நமக்கு குழப்பத்தை கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

நாம் துன்பத்தைக் காண்போமானால், அது நாம் ஏதாவது தவறு செய்ததால் வந்ததல்ல என்பதையும், பிறரது அலுவல்களில் ஈடுபட்டதால் வந்ததல்ல என்பதையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சத்தியனிமித்தமும் சகோதரர் நிமித்தமும் நாம் துன்பப்படுகிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் தேவனுடைய குடும்பத்திற்குள் வந்திருக்கிறோம் என்பதற்கான ரூபகாரங்கள் இருந்தால், அவரது சித்தத்தை அறியவும் செய்யவும் நாம் ஆராய்ந்தால், வழியிலே நாம் சோதனைகளையும் கஷ்டங்களையும் பெற்றிருந்தால், அதை நாம் சரியானபடி அப்பியாசப்படுத்திக் கொண்டால், நாம் அவரது உண்மையுள்ள ஜனங்களாக நம்மை எண்ணிக்கொள்ளலாம்.

---------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com